**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கள்ளக்குறிச்சி**

முன்னிலை : **திருமதி.த.பானுமதி. B.A., L.L.B,**
முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம்
கள்ளக்குறிச்சி.
குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1
கள்ளக்குறிச்சி.(FAC)

2026–ம் ஆண்டு மே மாதம் 26–ம் நாள் செவ்வாய்கிழமை

**Crl.M.P. No.858/2026**

A1–திரு. கார்த்திக்
த–பெ. கருப்பன் .. மனுதாரர்

//எதிர்//

காவல் நிலைய பொறுப்பு அதிகாரி,

குடிமைபொருள் வழங்கல் குற்ற புலனாய்வு பிரிவு காவல் நிலையம்,

கள்ளக்குறிச்சி,

குற்ற எண்.102/2026

U/sec.6(4) of TNSC (RDCS) order 1982, 7(1) (a)(ii) of the EC Act ...எதிர்மனுதாரர்

* * * * *

இம்மனுவானது 22.05.2026 அன்று தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் திரு.C.இளவரசு அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**உத்தரவு**

இம்மனுவானது பிரிவு 480 BNSS–ன் கீழ் மனுதாரரை பிணையில் விடவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கு கோப்புகளை பார்க்கும்போது மனுதாரர் 850 கிலோ ரேசன் அரிசியை கடத்திய குற்றத்திற்காக பிரிவு 6(4) of TNSC (RDCS) order 1982, 7(1) (a)(ii) of the EC Act-ன் கீழ் கைது செய்யப்பட்டு 21.05.2026 அன்று நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும், அவர் இதுநாள் வரையில் சிறையில் உள்ளார் என்றும் தெரியவருகிறது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர் எந்த குற்றத்தையும் செய்யவில்லை என்றும், மனுதாரர் மீது பொய்யாக வழக்கு போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் தகுந்த ஜாமீன்தாரர்களை கொண்டுள்ளார் என்றும், நீதிமன்றம் விதிக்கும் கட்டளைகளை பின்பற்ற தயாராக உள்ளார் என்றும், எனவே மனுதாரரை பிணையில் விடவேண்டும் என்றும் வாதிட்டார். அரசு தரப்பில் மனுதாரரை பிணையில் விட்டால் அவர் சாட்சிகளை மிரட்டி கலைக்கக்கூடும் என்றும், மேலும் குற்றச் செயல்களில் ஈடுபடக்கூடும் என்றும் ஆட்சேபனை தெரிவித்தனர்.

2. அரசு தரப்பு பதிலை பார்க்கும்போது மனுதாரர் மீது முன் குற்றவழக்கு எதுவும் இல்லையென்பதை காணமுடிகிறது. ஆகவே மேற்படி காரணத்தையும், இவ்வழக்கின் தன்மையையும், மனுதாரர் கடந்த 06–நாட்களாக சிறையில் உள்ளார் என்பதையும், இந்த வழக்கில் ரேஷன் அரிசியை மனுதாரர் விலைக்குதான் வாங்கியதாக உள்ளது என்பதையும், மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் உத்தரவாதம் அவர் வழக்கு விசாரணைக்கு ஆஜராவதை

உறுதி செய்யும் விதமாக உள்ளது என்பதையும், மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வாதத்தையும் கவனமாக கருத்தில் கொண்டு பார்க்கும்போது மனுதாரரை அரசு தரப்பு ஆட்சேபனையில் உள்ள காரணங்களுக்காக மட்டும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்துவது அவசியமற்றது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் உச்ச நீதிமன்றத்தின் அறிவுரையான 'bail is the rule and Jail is an exception' என்பதையும் இந்த நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. இருந்தபோதிலும் மனுதாரரின் ஒத்துழைப்பை விசாரணையிலும், இந்த நீதிமன்றத்திலும் உறுதி செய்வதற்காக தகுந்த நிபந்தனைகளுடன் மனுதாரரை பிணையில் விடுவது தகுந்ததாக மற்றும் சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. முடிவாக இம்மனுவானது கீழ்கண்ட நிபந்தணைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

**நிபந்தணைகள்**

| | |
|---|---|
| 1 | மனுதாரர் சொந்தமாக ரூ.10,000/- பிணைபத்திரமும், இரண்டு தனி நபர்கள் தலா ரூ,30,000/-க்கு பிணை பத்திரமும் எழுதி தரவேண்டும் என்றும், மனுதாரர் பிணையில் வெளியில் வந்த நாளிலிருந்து 10-நாட்களுக்கு கள்ளக்குறிச்சி CSCID காவல் நிலையத்தில் காலை 09.00 மணிக்கு ஆஜராகி கையொப்பம் செய்யவேண்டும் என்றும், |
| 2 | மனுதாரர் தனது ஆதார் அட்டை, குடும்ப அட்டை அல்லது அரசு சான்றின் ஏதேனும் நகல்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், |
| 3 | மனுதாரர் அரசு தரப்பு சாட்சியங்களை கலைக்க கூடாது என்றும், |
| 4 | மனுதாரர் இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபட கூடாது என்றும், |
| 5 | மனுதாரர் தலைமறைவு ஆகாமல் விசாரணைக்கு அழைக்கும்போது நீதிமன்றத்திலும், எதிர்மனுதாரர் காவல் நிலையத்திலும் ஆஜராகவேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த ஆணை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு மே மாதம் 26-ம் நாள் செவ்வாய்கிழமையாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

BANUMATHI Digitally signed by BANUMATHI Date: 2026.05.27 15:42:00 +0530

நீதித்துறை நடுவர் எண்.1 (FAC)
கள்ளக்குறிச்சி.